# 12 சமயகுரவர் பணிகள்

## 1. திருஞானசம்பந்தர்

**வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்**
**பூத பரம்பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத**
**சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்**
**பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.**

என்று திருஞானசம்பந்தரது செயற்கரிய செயல்களை சேக்கிழார் தனது பெரிய புராணத்தில் விபரிக்கின்றார். கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் ஞானசம்பந்தர் அக்காலச் சைவ சமய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றி உள்ளார்.

### அ. திருஞானசம்பந்தரது சைவசமயப்பணிகள்

பாண்டிய நாட்டின் அரசனாகிய கூன் பாண்டியன் சமண சமயத்தைத் தழுவினான். மக்களும் அவனைப் பின்பற்றிச் சமண சமயத்தைத் தழுவினர். அதனால் பாண்டிய மன்னனின் மனைவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சரான குலச்சிறையாரும் வருந்தினர். ஞானசம்பந்தருக்குத் தமது நிலையைத் தெரியப்படுத்தினர். எனவே அவர்கள் இருவரும் வரவேற்க ஞானசம்பந்தர் பாண்டிய நாட்டுக்கு வந்து திருமடத்தில் தங்கி இருந்தார். அவரது வருகையை அறிந்த சமணர்கள் மடத்துக்குத் தீ வைத்தனர். அத்தீயில் நின்றும் தப்பிய ஞானசம்பந்தர் அத்தகைய கொடியவர்கள் வாழும் நாட்டை ஆளும் வேந்தனின் குற்றம் தான் கொடியது எனக் கூறி **"செய்யனே திருஆலவாய் மேவிய ஐயனே ......"** என்ற பதிகத்தினைப் பாடினார். பாண்டிய அரசனுக்கு வெப்புநோய் ஏற்பட்டது. சமணர்கள் பாண்டியனின் வெப்புநோய் நீக்கப் பலவாறு முயன்று பயனின்றி நின்றனர். பாண்டிய மன்னன் தனது தவறை உணர்ந்தான். ஞானசம்பந்தர் **"மந்திரமாவது நீறு...."** என்ற பதிகத்தைப் பாடி மன்னனின் வெப்பு நோயை நீக்கினார். பாண்டிமாதேவியின் நற்பண்புகளைக் கண்டு வியந்த ஞானசம்பந்தர் **"மங்கையர்கரசி வளவர் கோன் பாவை...."** மற்றும் **"மானினேர்விழி மாதராய்..."** என்ற பதிகங்களைப் பாடி மங்கையர்க்கரசியாரின் பணிகளைப் போற்றினார். அவ்வாறு பாண்டிய மன்னன் மீண்டும் சைவ சமயத்தைத் தழுவியமையால் பாண்டிய நாடு முழுவதும் மீண்டும் சைவசமயத்தைத் தழுவ திருஞானசம்பந்தரே வழிவகுத்தார்.

திருஞானசம்பந்தரது சமயப்பணிகளுள் முக்கியமானது சமணர்களை வாதில் வென்று சைவ சமயமே மேலானது என நிரூபித்தமையாகும். அவர் சமணர்களோடு அனல்வாதம் செய்யும் பொருட்டு **போகமார்த்த பூண்முலையாள்....** என்ற பதிகம் எழுதப்பட்ட ஏட்டைத் தீயில் இட்டு **தளிரிள வளரொளி....** எனும் பதிகத்தைப் பாடினார். அப்போது சமணர்களது ஏடு தீயில் எரிந்து சாம்பலாக இவரது ஏடு எரியாமல் காணப்பட்டது. அது கண்ட சமணர்கள் புனல்வாதத்திற்கு வருமாறு சம்பந்தரை அழைத்தனர். **வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்...** என்ற திருப்பாசுரம் எழுதிய ஏட்டை வைகை ஆற்றில் ஞானசம்பந்தர் விட்டார். ஏடு நீரில் எதிர்த்துச் சென்று கரை ஏறியது. சமணர்களது **அத்தி நாத்தி.....** எனும் வாசகமுடைய ஏடு நீரலைகளால் அடிக்கப்பட்டு சீர்குலைந்தது.

**"வேந்தனும் ஓங்குக..."** என்று எழுதியிருந்தமையின் காரணமாகவும், பாண்டிய மன்னனது முதுகுக் கூன் நிமிர்ந்தது. மன்னனது முதுகு கூன் நிமிர்ந்தது போன்று பாண்டிய நாட்டில் குன்றிய சைவம் ஞானசம்பந்தரது அத்தகைய பணிகள் மூலம் மீண்டும் தலைநிமிர்ந்தது.

ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்த ஞானசம்பந்தர் ஆலயங்கள் தோறும் யாத்திரை மேற்கொண்டு அவ்வாலயங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனதும் இறைவியினதும் சிறப்புக்களைத் தேவாரப் பதிகங்கள் மூலம் வெளிப்படுத்தினார். அதனால் ஆலயங்களுக்கு அடியவர்கள் செல்லத் தலைப்பட்டனர்.

வேதாரணியத்தில் மறைகளால் பூட்டப்பட்டு, அடியவர்கள் வழிபட முடியாதிருந்த ஆலயத்தின் கதவை நாவுக்கரசர் திறக்கும் படி பாட ஞானசம்பந்தர் **"சதுரம் மறை தான்துதி...."** என்ற பதிகம் பாடிக் கதவை மூட வழிவகுத்தார். அதன் மூலம் ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம் புலனாகின்றது. ஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்று சைவ சமய உண்மைகளை நிரூபித்தது போன்று பௌத்தர்களையும் வாதில் வென்று அவர்களைச் சைவர்களாக்கிச் சைவசமயத்தினை உயர்வடையச் செய்தார். "புத்தநந்தி" என்ற பௌத்த சமயத் தலைவனை "**புத்தர் சமண் கழுக்கையார்**" எனும் பதிகத்தை பாடி அவனை வாதில் வென்று அவனது தலையில் இடி விழுந்து இறந்த பின்னர் "சாரி புத்தன்" தலைமையில் மீண்டும் வாதிட வந்த பௌத்தர்களை வாதில் வென்று அவர்களைச் சைவர்களாக மாற்றினார்.


ஞானசம்பந்தர் பாடிய தேவாரங்களின் தொகை 14000 என நம்பியாண்டார் நம்பி கூறியுள்ளார். ஆயினும் நமக்குக் கிடைத்துள்ள தேவாரங்களின் எண்ணிக்கை 4145 ஆகும். இவற்றுள் முதலாம் திருமுறையில் 136 பதிகங்களும், இரண்டாம் திருமுறையில் 122 பதிகங்களும், மூன்றாம் திருமுறையில் 125 பதிகங்களுமாக மொத்தம் 383 பதிகங்கள் காணப்படுகின்றன.

## ஆ. திருஞானசம்பந்தரது சமூகப்பணிகள்

ஞானசம்பந்தர் சைவ சமயப் பணிகளை ஆற்றிச் சைவத்தினை உயர்வடையச் செய்தது போன்று சைவ சமய சமூகப் பணிகளை மேற்கொண்டு சைவ சமயத்தினை மேல்நிலைப்படுத்தியதாக அவரது வாழ்க்கை வரலாறு மூலம் அறிகின்றோம். சோழ நாட்டிலே **கொல்லி மழவன்** என்ற அரசனது மகள் வலிப்பு நோயினால் அவதியுற்ற போது **"துணிவளர் திங்கள்...."**என்ற பதிகத்தினைப் பாடி அவளது நோயைக் குணப்படுத்தினார். அது போல் ஞானசம்பந்தர் கொடிமாடச்செங்குன்றூருக்கு வருகை தந்த போது அங்கு பனியின் கொடுமையால் வருந்திக்கொண்டு இருந்த மக்களுக்காக இரங்கி **"அவ்வினைக்கு இவ்வினை..."** என்ற பதிகத்தினைப் பாடி இறை அருளால் அவர்களது துன்பத்தை நீக்கத் திருஞானசம்பந்தர் வழிவகுத்தார்.

திருமருகல் என்ற இடத்திற்கு வணிகனும் அவனது காதலியும் வரும்போது வணிகன் பாம்பினால் கடியுண்டு இறந்தான். தனது காதலனைப் பிரிந்து தனித்து நின்று வருந்துகின்ற காதலியின் புலம்பலைக் கண்டு ஞானசம்பந்தர் இரங்கினார். **"சடையாயெனுமால்....."** எனும் பதிகத்தைப் பாடி வணிகனை உயிர்ப்பித்து அவர்களிருவருக்கும் திருமணம் நடக்க ஆசீர்வதித்தார்.

திருவீழிமிழலையில் மழையின்மையால் அவர்களது பஞ்சத்தைக் கண்டு மனம் வருந்திய ஞானசம்பந்தர் **"வாசி தீரவே காசு நல்குவீர்....."** என்ற பதிகத்தினைப் பாடினார். இறைவனிடத்தில் பொற்காசு பெற்று மக்களது பசி தீர உணவு வழங்கினார். சிலநாட்களில் மழை பொழிய பஞ்சம் தீர்ந்தது.



பூம்பாவையை உயிர்ப்பித்தல்

அது போன்று திருவோத்தூரில் திருத்தொண்டர் என்னும் அடியார் நட்ட பனைகள் காய்க்காது காணப்பட்டன. அதுகண்ட சமணர்கள் **"ஆண்பனைகள் எங்கேனும் காய்ப்பதுண்டா..."** என ஏளனம் செய்தமையால் வருந்திய திருத்தொண்டரின் வேண்டுகோளுக்கு இணங்கி சம்பந்தர் **"பூத்தேர்ந்தாயன......"** எனத் தொடங்கும் பதிகத்தினைப் பாடி ஆண் பனைகளெல்லாம் பெண் பனைகளாக மாறிக் காய்த்துக் குலுங்க வழி செய்தார்.

திருமைலாப்பூருக்குச் சென்ற ஞானசம்பந்தர் அங்கு சிவநேசன் என்னும் அடியவர் ஒருவர் தனது மகளாகிய பூம்பாவை என்பவள் பாம்பு தீண்டி இறந்தமையால் மிகவும் வருந்தி நின்றார். அவரது துயரை நீக்கும் பொருட்டு

பானையில் இடப்பட்ட பூம்பாவையின் எலும்புகளிலிருந்து அவளை உயிர்ப்பிக்க **“மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை…”** என்ற பதிகத்தினைப் பாடினார். பூம்பாவை அழகிய பெண்ணாக உயிர் பெற்று எழுந்தாள்.

ஞானசம்பந்தரது சமூகப் பணிகளுள் பிரதானமானது அவர் தொண்டர் குலமே தொழுகுலம் என்பதற்கமைய அனைத்து அடியவர்களிடத்தும் அன்பு கொண்டு ஒழுகியமையே ஆகும். திருநீலநக்க நாயனார் எனும் அந்தணர் வீட்டில் ஞானசம்பந்தரும் பாணர் வகுப்பைச்சேர்ந்த திருநீலகண்டரும் அவரது மனைவி மதங்கசூளாமணியும் தங்கினர். சம்பந்தரது சமூகசமரச நோக்கும், பேதங்களெவையும் கொள்ளாத உளப்பாங்கும், பக்திலயிப்பினால் அனைவரும் சிவனடியார்களே என்னும் தெளிவும் சம்பந்தரது சமூக நோக்காக அமையப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 2. திருநாவுக்கரசர்

**தலைகொள் நஞ்சமுதாக விளையுமே**
**தழல் கொள் நீறு தடாகம தாகுமே**
**கொலை செய் ஆனை குனிந்து பணியுமே**
**கோளராவின் கொடுவிடம் தீருமே**
**கலைகொள் வேத வனப்பதி தன்னிலே**
**கதவு தானுங் கடுகத் திறக்குமே**
**அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே**
**அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.**

என்று நாவுக்கரசரது அற்புதங்களை பழம் பாடல் ஒன்று கூறுகின்றது. ஞானசம்பந்தரது சம காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் நாவுக்கரசரும் சைவசமய வளர்ச்சிக்காக ஆற்றிய பலதரப்பட்ட பணிகள் சிறப்பானவை.

### அ. திருநாவுக்கரசரது சைவசமயப் பணிகள்

நாவுக்கரசரது சைவசமயப் பணிகளுள் முதன்மையானது ஆலய வழிபாட்டுக்கு முதன்மை அளித்தமையாகும். பழையாறையை அடுத்துள்ள வடதளி என்னும் இடத்தில் விளங்கிய சிவாலயத்தை சமணர்கள் சமணப்பள்ளியாக மாற்றியதோடு அங்குள்ள சிவலிங்கத்தையும் மறைத்து வைத்தனர். அதனை அறிந்த நாவுக்கரசர் மனம் வருந்தி இறைவனைத் துதித்தார். இறைவன் சோழமன்னனது கனவிலே தோன்றித் தம்மை வெளிப்படுத்துமாறு கட்டளையிட்டார். மறுநாள் சோழ மன்னன் வடதளிக்குச் சென்று சமணப்பள்ளியாக மாற்றப்பட்ட ஆலயத்தைப் புனருத்தாரணம்

செய்து மறைத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் வெளிப்படுத்தி வழிபட வழிவகுத்தான்.

அதனைப் போன்று திருமறைக்காட்டில் மறைகளால் பூட்டப்பட்டிருந்த சிவாலயக் கதவினைத் திறந்து, அடியார்கள் வழிபாடு செய்வதற்கு வழிவகுத்தார். நாவுக்கரசர் ஆலய வழிபாட்டினை முதன்மைப்படுத்தியது போன்று ஆலயங்களைத் தூய்மையாகப் பேண வேண்டும் என்பதிலும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். கையில் **"உழவாரப்படை"**யை வைத்துக்கொண்டு, செல்கின்ற ஆலயங்களின் வீதிகளில் காணப்படும் புற்களை உழவாரத்தின் மூலம் செதுக்கி வீதிகளைத்தூய்மைப்படுத்தினார். திருச்சக்திமுற்றம், திருப்புகலூர் முதலான ஆலயங்களில் உழவாரப்பணி புரிந்தமையால் நாவுக்கரசரை **உழவாரப்படையாளி** என்றும் **தொண்டுக்கு அப்பர்** எனவுஞ் சிறப்பித்துக் கூறினர்.



**என் கடன் பணி செய்து கிடப்பதே, தன்கடன் அடியேனையுந் தாங்குதல்** எனக் கூறி ஆலயங்கள் தோறும் சரியைத் தொண்டாற்றிய நாவுக்கரசர் உலகப்பற்றற்ற நிலையில் நின்றே செயற்பட்டார். பூம்புகாரில் உழவாரத்தொண்டு செய்யும் பொழுது தன்முன்னே தென்பட்ட பொன்னையும் மணிகளையும் கற்களாக எண்ணி ஒதுக்கியதோடு, தன்முன்னே தோன்றி நடனமாடிய தேவலோக அரம்பையர்களது அழகில் மயங்காது உறுதியுடன் நின்று **"பொய்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற ......."** என்ற பதிகத்தினைப் பாடினார். அவர்கள் அவரைத் தொழுது அகன்றனர்.

நாவுக்கரசரது தேவாரங்கள் **திருவிருத்தம், திருத்தாண்டகம்** ஆகிய பாடல் வகைகளைச் சேர்ந்தவையாகும். இவர் பாடிய தேவாரங்களில் 3066 பாடல்களே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. நான்காம் திருமுறையில் 113 பதிகங்களும், ஐந்தாம் திருமுறையில் 100 பதிகங்களும், ஆறாம் திருமுறையில் 99 பதிகங்களுமாக 312 பதிகங்களை இவர் அருளியுள்ளார். அத்தகைய அப்பரடிகளது தேவாரப் பாடல்களில் கழிவிரக்க உணர்வே அதிகமாகக் காணப்படுகின்றது.

## ஆ. திருநாவுக்கரசரின் சமூகப்பணிகள்.

திருநாவுக்கரசர் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு சமூகப்பணிகள் பல ஆற்றியதை அவர்தம் வரலாற்றினூடாக அறிய முடிகின்றது. திருவீழிமிழலையில் பசிப் பிணியால் வருந்திய மக்களுக்காக இறைவனிடம் படிக்காசு பெற்று அவர்களது பசிப்பிணியைப் போக்கினார்.

திங்களூரில் பாம்பினால் கடியுண்டு இறந்த அப்பூதியடிகளது மகனாகிய மூத்த திருநாவுக்கரசு என்னும் சிறுவனை **"ஒன்று கொலாமவர் சிந்தை...."** என்ற பதிகத்தினைப்பாடி உயிர்ப்பித்தார். அத்தோடு வாகீசர் அமுது செய்யாதிருந்ததைக் கண்டு அப்பூதியடிகள் தளர்வெய்தியதனால் அவரது மனத் தளர்ச்சியை நீக்கும் பொருட்டு **"சொன்மாலை"** எனத்தொடங்கும் பதிகத்தைப்பாடி அதில் **"அழலோம்பு மப்பூதி குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்..."** என்று அப்பூதியடிகளையும் புகழ்ந்துள்ளார்.

## 3. சுந்தரமூர்த்தி நாயனார்

**மோகம் அறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென**
**ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்**
**தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை**
**ஏதாகச் சொல்வே னியான்.**

என்று சுந்தரமூர்த்தி நாயனாரது செயற்கரிய செயல்களைச் சித்தாந்த சாத்திர நூல்களுள் ஒன்றான திருக்களிற்றுப்படியார் கூறுகின்றது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் சைவசமய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றியுள்ளார்.

### அ. சுந்தரமூர்த்தி நாயனாரது சைவசமயப் பணிகள்

ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் எங்ஙனம் இறைவனுக்கும் இறைவன் எழுந்தருளியுள்ள ஆலயங்களுக்கும் முக்கியத்துவம் அளித்தனரோ அது போன்று சுந்தரரும் அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்ததோடு அவர்களை விட ஒருபடி அப்பால் சென்று இறையடியார்களது வழிபாட்டிற்கும் முக்கியத்துவம் வழங்கினார்.

திருவாரூர் கோயிலுக்கு வந்த சுந்தரர் அங்கு கூடியிருந்த சிவனடியார்களை மதிக்காது சென்றபோது அவ்வடியார்களுள் விறன்மிண்ட நாயனார் சுந்தரரது செயல் கண்டு சினம் கொள்ள, சுந்தரர் தம் தவறை உணர்ந்து சிவனடியார்களைப் போற்றும் முகமாகத் "திருத்தொண்டத் தொகை" யைப் பாடினார்.

**தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்**
**திருநீல கண்டத்துக் குயவனார்க்கடியேன்**
**இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்**
**இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்**
**வெல்லுமாமிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்**
**விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்- கடியேன்**
**அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்**
**ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.**

எனும் பாடல் திருத்தொண்டத் தொகையின் முதலாவது பாடலாகும். இறைவனே அந்தணர் வடிவில் வந்து **“தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்...”** என மேற்படி அடியை எடுத்துக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

சைவ உலகில் அடியார்களை வணக்கத்திற்குரியவர்களாக ஆக்கிய சிறப்பில் திருத்தொண்டத் தொகைக்கு உயரிய பங்குண்டு. நம்பியாண்டார் நம்பி **திருத்தொண்டர் திருவந்தாதி** பாடுவதற்கும், சேக்கிழார் **பெரிய புராணம்** பாடுவதற்கும் பெருந்துணை புரிந்த நூல் திருத்தொண்டத் தொகையாகும்.

சுந்தரர் இறைவனைத் தோழராகக் கொண்டு தனது லௌகீக வாழ்வின் தேவைகளுக்கெல்லாம் இறைவனைத் துணைபோகக் கேட்டு யோக மார்க்கத்தில் வாழ்ந்து யோகநெறி தழைக்க வழிவகுத்தவராவார். சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரங்களுள் நமக்குக் கிடைத்த தேவாரங்கள் 1026 ஆகும். அவை 100 பதிகங்களாக ஏழாம் திருமுறையில் காணப்படுகின்றன. சுந்தரரின் பாடல்கள் சொன்னயமும் பொருள் நயமும் மிக்கவை.

### ஆ. சுந்தரமூர்த்தி நாயனாரது சமூகப் பணிகள்

சுந்தரமூர்த்தி நாயனாரது சமயப் பணிகளைப் போன்று அவரது சமூகப்பணிகளும் சைவசமய வளர்ச்சிக்கு வலுவூட்டுவனவாக அமைந்திருந்தன. திருப்புக்கொளியூரில் மறையோர் வாழும் வீதி வழியாகச் சுந்தரர் சென்று கொண்டிருக்கையில் ஒரு வீட்டில் மங்கல ஒலியும் எதிர் வீட்டில் அழுகை ஒலியும் கேட்டன. அதைக் கேட்டு வியப்புற்ற சுந்தரர் அதற்கான காரணத்தை வினவ, “ஐந்து வயது நிரம்பிய இந்த இரண்டு வீட்டுப் பிள்ளைகளும் நீராடுவதற்காக குளத்திற்குச் சென்றனர். அவர்களுள் ஒருவனை முதலை விழுங்கிற்று. மற்றையவன் வீடு சேர்ந்தான். அவனுக்கு இன்று பூணூற் சடங்கு. எதிர்வீட்டில் முதலை விழுங்கிய தம் மகனை நினைத்து பெற்றோர் வருந்துகின்றனர்” என்றனர். சுந்தரர் குளக்கரைக்குச் சென்று திருப்புக்கொளியூர் அவிநாசிப் பெருமானை நினைந்து வணங்கி **“ஏற்றான் மறக்கேன்....”** என்ற

பதிகத்தைப் பாடினார். இறைவன் திருவருளால் முதலை அப்பிள்ளையைக் கரையிற் கொணர்ந்து உமிழ்ந்தது. பின்பு அப்பிள்ளைக்கு சுந்தரர் பூணூற் சடங்கு செய்வித்தார்.



## 4. மாணிக்கவாசக சுவாமிகள்

**பெருகும் வையை தனை அழைப்பிக்குமே**
**பிரம்படிக்குப் பிரான் மேனி கன்றுமே**
**நரியெல்லாம் பரியாக நடத்துமே**
**நாடி மூகைதனைப் பேசுவிக்குமே**
**பரிவிற் பிட்டுக்கு மண் சுமப்பிக்குமே**
**பரமன் ஏடெழுதக் கோவை பாடுமே**
**வருகும் புத்தரை வாதில் வெல்லுமே**
**வாதவூரர் வழங்கிய பாடலே.**

என்று மாணிக்கவாசகரது அற்புதங்களைப் பழம் பாடலொன்று கூறுகின்றது. மாணிக்கவாசகரது காலம் பற்றி ஆராய்ச்சியாளர்களுக்குக்கிடையே வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆயினும் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே மாணிக்கவாசகர் வாழ்ந்திருந்ததாகப் பெரும்பாலான அறிஞர்கள் கருதுகின்றனர்.

### அ. மாணிக்கவாசகரின் சைவசமயப் பணிகள்.

மாணிக்கவாசகரது சைவப்பணிகளுள் சிறப்பானது அவர் நமக்களித்த **திருவாசகமாகும்.** மாணிக்கவாசகரது பாடல்களை அந்தண வடிவில் வந்த சிவபெருமான் மாணிக்கவாசகர் கூற எழுதி அருளினார். அதாவது **"வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது"** என்று வரையப்பட்டும் **"அழகிய சிற்றம்பலமுடையான்"** என இறைவன் ஒப்பமிட்டும் திருவாசக ஏட்டினை நிறைவு செய்து இருந்தார்.


திருவாசகத்தில் **சிவபுராணம்** முதல் **அச்சோப்பதிகம்** ஈறான ஐம்பத்தொரு பதிகங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் **திருஅம்மானை, திருஉந்தியார், திருவெம்பாவை, திருச்சாழல், திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூஞ்சல்** என்பன நாட்டுப்புறப் பெண்கள் பாடும் பாடல்கள் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

**"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்"** என்று போற்றத்தக்க அளவுக்கு திருவாசகப்பாடல்கள் எளிமை நயம் மிக்கவையாகக் காணப்படுகின்றன. இதேபோன்று இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் எண்ணி அன்பு கலந்துருகப் பாடிய பாடல்கள் **திருக்கோவையார்** ஆகும். இது தமிழிலுள்ள கோவை நூல்களுக்கெல்லாம் தலை சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. மாணிக்கவாசகர் பாடிய **திருவாசகம் 656** பாசுரங்களையும் **திருக்கோவையார் 400** பாசுரங்களையும் கொண்டு எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன.

மாணிக்கவாசகர் தமது காலத்தில் ஏனைய சமயத்தவர்களை வாதில் வென்று சைவசமய உண்மைகளே மேலானவை என நிரூபித்துள்ளார். தில்லைக்கு வருகை தந்த பௌத்த மன்னனும் பௌத்த குருமாரும் புத்தசமயமே மேலானது என வாதிட்டனர். மாணிக்கவாசகர் சைவசமய உண்மைகளை எடுத்துக் கூறி அவர்களை மௌனிகளாக்கினார். பின்னர் தமது தவறுகளை உணர்ந்த பௌத்த குருமார்களும் பௌத்த மன்னனும் சைவ சமயத்தைத் தழுவினர்.

### ஆ. மாணிக்கவாசகரின் சமூகப்பணிகள்.

மாணிக்கவாசகர் இறைவனது திருவருளுடன் குறிப்பிடத்தக்க சமூகப்பணிகளை ஆற்றியதை அறியமுடிகின்றது. அரிமர்த்தன பாண்டியனது முதலமைச்சராக விளங்கியபோது திருப்பெருந்துறைக்கு குதிரைகள் வாங்குவதற்காகச் சென்ற வாதவூரர், மன்னன் தமக்களித்த பொற்காசுகளனைத்தையும் சமூக நன்நோக்கில் நின்று சிவனடியார்களது பசியைப் போக்க உணவு வழங்கியும், திருமடங்கள் அமைக்கவும் செலவிட்டார்.



தில்லையில் சைவசமய உண்மைகள் சார்பாக வாதிடவந்த பௌத்த மன்னனின் மகளின் ஊமைத்தன்மையை இறை திருவருளினால் நீக்கி அவளைப் பேசச்செய்தமை இவரது சமூகப்பணிக்குச் சான்றாகும்.

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. பாண்டிய நாட்டில் சைவசமயம் மீண்டும் வளருவதற்குக் காரணமாக அமைந்தவர்கள் யாவர்?
2. நமக்குக் கிடைத்துள்ள ஞானசம்பந்தரது தேவாரங்களின் எண்ணிக்கை யாது?
3. ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் இணைந்து ஆற்றிய சமயப்பணிகள் யாவை?
4. நாவுக்கரசரது பாடல்கள் எவ்வகையைச் சேர்ந்தன?
5. இறைவன் அடியெடுத்துக் கொடுக்கச் சுந்தரமூர்த்தி நாயனாராற் பாடப்பெற்ற நூல் எது?
6. சுந்தரமூர்த்தி நாயனாரது சமூகப்பணிகள் யாவை?
7. திருவாசகத்தின் முதல் பகுதியையும் இறுதிப் பகுதியையும் குறிப்பிடுக.
8. மாணிக்கவாசகர் சிவபெருமானைத் தலைவராகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு பாடிய பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

## செயற்பாடு.

01) சமயகுரவர் நால்வரதும் சமய சமூகப்பணிகளை தனித்தனியாக அட்டவணை ஒன்றில் பூர்த்தி செய்து வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

## பாடச் சுருக்கம்.

- சமயகுரவர் நால்வரும் இறையருளுடன் சமய, சமூகப் பணிகளை ஆற்றினர்.
- அவர்களது இப்பணிகள் மூலம் சைவசமயம் வளர்ச்சியுற்றது.
- சமயகுரவர்கள் அருளிய திருமுறைப்பாடல்கள் இறை பக்தியை மெருகூட்டவல்லன.
- நாமும் சமயகுரவர்களது பணிகளைக் கற்று, அவற்றுக்கு மதிப்பளித்து எமது பிரதேசங்களிலும் அவை போன்ற பணிகளுக்கு முதன்மையளிப்போம்.